# பாடம் 6

# வாக்குத்தத்தத்தின் முன்னுரிமை



**மனன வசனம்**

**அன்றியும், சுதந்தரமானது நியாயப் பிரமாணத்தினாலே உண்டானால் அது வாக்குத் தத்தத்தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத் தத்தினாலே அருளிச்செய்தாரே. கலா 3:18.**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 3:15-20; ஆதி 9:11-17; மத் 5:17-20; யாத் 16:22-26; ஆதி 15:1-6.**

ஜூலை 29 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

ஒருமுறை அரசியல்வாதி ஒருவரிடம், "தேர்தல் பிரசாரத்தின்போது நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றிவிட்டீர்களா?" என்று ஒருவர் கேட்டார். "நான் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று நினைத்திருக்கிறேன்" என்றார் அந்த அரசியல்வாதி.

பிறர் வாக்குறுதியை நம்பி ஏமாந்த அனுபவம் யாருக்குத்தான் இல்லை? வாக்குக் கொடுத்துத் தவறியவர் யார்தான் இல்லை?

எப்படியாவது நிறைவேற்றிவிட வேண்டுமெனும் எண்ணத்தோடு சிலர் வாக்குறுதி கொடுப்பார்கள்; பின்னர் மறந்துபோவார்கள். சிலர் வாய்மொழியாகவோ எழுத்துமூலமாகவோ கொடுக்கும் வாக்குறுதிகளும் பொய்யாகிவிடும்.

ஆனால், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் முற்றிலும் வேறுபட்டவை. அவருடைய வார்த்தைகள் உண்மையுள்ளவை; மாறாதவை. 'அதைச் சொன்னேன், அதைநிறைவேற்றுவேன்;அதைத்திட்டம்பண்ணினேன், அதைச் செய்துமுடிப்பேன்' என்கிறார். ஏசா 46:11.

ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்திற்கும் 430 வருடங்களுக்குப்பின் இஸ்ரவேலுக்கு தேவன் கொடுத்த நியாயப்பிரமாணத்திற்கும் உள்ள சம்பந்தத்தை பவுல் சுட்டிக்காட்டுகிறார். 'அதை நாம் எவ்வாறு விளங்கிக்கொள்ளலாம்? நற்செய்தியைப் பிரசங்கிப்பதில் அதன் பங்கு என்ன?'

2017, ஆகஸ்ட் 5 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

ஞாயிறு
ஜூலை 30

## நியாயப்பிரமாணமும் விசுவாசமும் (கலா 3:15–18)

'ஆபிரகாமின் வாழ்க்கையில் விசுவாசம் முதன்மையாகக் காணப்பட்டதென்று பவுலின் எதிரிகள் ஒத்துக்கொள்ளலாம். ஆனாலும், 'ஆபிரகாமுக்குப்பின் நான்கு நூற்றாண்டுகள் கழித்து இஸ்ரவேலருக்கு நியாயப்பிரமாணத்தை தேவன் கொடுத்தது ஏன்? நியாயப்பிரமாணம் வந்ததும், முந்தைய ஏற்பாடுகள் ஒழிந்து போகவில்லையா?' என்று கேள்வி இருக்கும் என்பதை பவுல் அறிந்திருந்தார்.

***மனிதர் உயில் எழுதுவதை உருவகமாக வைத்து, ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கைய விளக்குகிறார் பவுல். அவர் சொல்லவிரும்புவது என்ன? கலா 3:15-18.***

உயில்வேறு; உடன்படிக்கை வேறு. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் பரஸ்பர சம்மதத்தோடு செய்துகொள்வது உடன்படிக்கை; அதை 'ஒப்பந்தம்' எனலாம். 'உயில்' என்பது தனிநபர் ஒருவர் எழுதி வைப்பது.

பரஸ்பர சம்மதத்தோடு செய்யப்படும் ஒப்பந்தத்தைச் சுட்டிக்காட்டும் கிரேக்க வார்த்தை **ஸிந்தெக்**. கிரேக்கப் பழைய ஏற்பாட்டில், ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையைச் சுட்டிக்காட்ட இந்த வார்த்தை வரவில்லை. மாறாக, 'உயில்' என்பதற்கான '**டியதைகய்**'தான் வருகிறது. 'ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையானது இரண்டு நபர்கள் செய்துகொண்ட பரஸ்பர ஒப்பந்தமல்ல' என்று மொழிபெயர்ப்பாளர்கள் உணர்ந்திருக்கலாம். தேவனுடைய சொந்த சித்தத்தின் அடிப்படையில்தான் அந்த உடன்படிக்கை அமைந்திருந்தது. 'இப்படிச் செய்தால்' என்பதுபோன்ற நிபந்தனைச் சொற்கள் அதில் இடம்பெறவில்லை. தேவனுடைய வார்த்தையை அப்படியே நம்புவதுமட்டுமே ஆபிரகாமின் வேலையாக இருந்தது.

ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையின் விசேஷத் தன்மைகளைச் சுட்டிக்காட்ட, 'உடன்படிக்கை', 'உயில்' என்று இருவேறு வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார் பவுல். மனிதர் எழுதும் உயில்போலவே, ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் ஒரு விசேஷித்த நன்மை தேவனுடைய வாக்குத்தத்தத்தில் இருந்தது. ஆதி 12:1-5; கலா 3:16; அதில் ஓர் சுதந்தரமும் வாக்களிக்கப்பட்டிருந்தது. ஆதி 13:15; 17:8; ரோமர் 4:13; கலா 3:29. தேவ வாக்குத்தத்தம் மாறாத தன்மையுள்ளது. ஒருவன் எழுதிய உயில் நடைமுறைக்கு வந்தபின் யாரும் அதை மாற்றமுடியாததுபோல, மோசேமூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையை எவ்விதத்திலும் ஒழித்துவிட முடியாதிருந்தது. தேவனுடைய உடன்படிக்கை ஒரு வாக்குத்தத்தமாகும். கலா 3:16; கொடுத்த வாக்கை தேவன் மாற்றமாட்டார். ஏசா 46:11; எபி 6:18.

பின்வரும் வரும் வசனங்களில் 'உடன்படிக்கை' என்பதற்குப் பதில் 'வாக்குத்தத்தம்' என்று வாசியுங்கள். 'உடன்படிக்கையின்' தன்மைபற்றி என்ன விளங்குகிறது? தேவனுடைய உடன்படிக்கையை ஒரு வாக்குத்தத்தமாகக் கருதி வாசிக்கும்போது, வசனங்கள் எவ்வளவு அர்த்தமுடையவையாக விளங்குகின்றன? உடன்படிக்கை பற்றிச் சிறப்பாக விளங்கிக்கொள்ள அது எவ்வாறு உதவுகிறது? ஆதி 9:11-17; 15:18; 17:1-21. தேவனை நாம் எவ்வாறு நம்பலாம் என்பதுபற்றி என்ன தெரிகிறது?

## விசுவாசம், பிரமாணம் (ரோமர் 3:31)

தேவனோடு மனிதன் உறவுகொள்ள விசுவாசம் முக்கியமானதென்று பவுல் ஆணித்தரமாகச் சொல்கிறார். விருத்தசேதனமோ 'நியாயப்பிரமாணத்தின் கிரிகைகளோ' இரட்சிப்பு பெறுவதற்கான அடிப்படைத் தேவை அல்லவென்று அடிக்கடி கூறுகிறார். ஏனெனில், 'நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே' கலா 2:16. மேலும், நியாயப் பிரமாணத்தின் கிரியைகள் அல்ல, விசுவாசம்தான் விசுவாசமார்க்கத்தாரின் அடையாளமாக இருக்கிறது. கலா 3:7. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை முக்கியப்படுத்தாததினால், 'நியாயப்பிரமாணம் அவசியமே இல்லையா? நியாயப்பிரமாணத்தை தேவன் ஒழித்துவிட்டாரா?' எனும் கேள்விகள் எழுகின்றன.

***நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் இரட்சிப்பு உண்டாகாமல், விசுவாசத்தினால் உண்டாவதால், விசுவாசமானது நியாயப்பிரமாணத்தை ஒழித்துவிட்டதென்று பவுல் சொல்கிறாரா? ரோமர் 3:31 ஐ ரோமர் 7:7,12; 8:3; மத் 5:17-20 உடன் ஒப்பிடுங்கள்.***

விசுவாசம்-நியாயப்பிரமாணம் பற்றி கலாத்தியரில் சொன்னது போலவே, ரோமர் 3 இலும் பேசுகிறார் பவுல். தான் நியாயப்பிரமாணத்தை ஒதுக்கிவிட்டு, விசுவாசத்தை உயர்த்துவதாகச் சிலர் கருதக்கூடுமென நினைக்கிறார் பவுல். எனவே, ''விசுவாசத்தினால் நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா?'' என்று கேள்வி எழுப்புகிறார். ரோமர் 3:31 இல் வரும் 'அவமாக்குதல்' என்பதற்கு, 'கடர்ஜியோ' எனும் கிரேக்க வார்த்தை உள்ளது. அடிக்கடி அவர் பயன்படுத்தும் இந்த வார்த்தையை 'ஒன்றுமில்லாமல் ஆக்குதல்'(ரோமர்3:3), 'ஒழித்தல்' (எபே 2:15), 'ஒழிந்துபோகுதல்'(ரோமர் 6:6) அல்லது 'அழியப்பண்ணுதல்'(1கொரி 6:13) என்றும் மொழிபெயர்க்கலாம். சிலுவையில் நியாயப்பிரமாணம் ஒழிந்ததென்று பவுல் போதித்ததாக இன்று சிலர் நினைக்கிறார்கள். அந்தக் கருத்தை பவுல் ஆதரிக்க விரும்பியிருந்தால், ரோமர் 3:31 இல் அப்படிச் சொல்லியிருக்க மாட்டார். அந்தக் கருத்தை முற்றிலும் மறுக்கும் பவுல், சுவிசேஷமானது நியாயப்பிரமாணத்தை 'நிலைநிறுத்துவதாகக்' கூறுகிறார்.

தேவன் தம் பிரமாணத்தை உயர்த்தியதைத்தான் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலின் திட்டம் வெளிப்படுத்துகிறது. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவது நியாயப்பிரமாணத்தை ஒழித்திருக்குமானால், பாவியை அவனுடைய பாவங்களிலிருந்து விடுவிக்கவும், தேவனோடு அவனை மீண்டும் சமாதானமாக்கவும் பாவநிவாரண பலியாக கிறிஸ்து மரித்திருக்கவேண்டிய அவசியமிருந்திருக்காது. மெய்யான விசுவாசம் இருக்குமானால், தேவபிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து, அவர் சித்தத்தை நிறைவேற்ற முழுவாஞ்சை இருக்கும். இரட்சகர்மேல் முழுமனதோடு அன்புவைப்பதால் உண்டாகும் மெய்விசுவாசம், கீழ்ப்படிதலுக்குத்தான் வழிநடத்தும்.

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டியதின் அவசியத்தை விசுவாசம் ஒழித்திருக்குமானால், என்னவெல்லாம் விளைந்திருக்கும்? உதாரணமாக, விபசாரம், திருடு, கொலை போன்றவை பாவமென்று தெரியாதிருந்தால் என்னவாயிருக்கும்? தேவபிரமாணத்திற்குக் கீழ்ப்படியாததால் நீங்களோ, மற்றவர்களோ அடைந்த பாடுகள் என்ன?

## நியாயப்பிரமாணத்தின் நோக்கம்

***கலா 3:19-29 இல், நியாயப்பிரமாணம்பற்றிப் பலமுறை இதில் பவுல் குறிப்பிடுகிறார். பவுல் முக்கியப்படுத்தும் நியாயப்பிரமாணம் எது?***

---

வச 19 இல் 'வருமளவும்' என்று சொல்லப்பட்டிருப்பதால், 'நியாயப்பிரமாணம் தற்காலிகமானது' என்றும், 'சடங்காச்சாரப் பிரமாணத்தைத்தான் அவ்வசனம் சுட்டிக்காட்டுகிறது' என்றும், 'நியாயப்பிரமாணத்தின் நோக்கம் சிலுவையில் நிறைவேறியதால், அது ஒழிந்துபோயிற்று' என்றும் சிலர் நினைக்கிறார்கள். இது உண்மைபோல் தோன்றலாம். ஆனால், கலாத்தியரில் பவுல் அப்படிச் சொல்லவில்லை. இஸ்ரவேலரின் மீறுதலின்நிமித்தம் சடங்காசாரப்பிரமாணமும் ஒழுக்கப் பிரமாணமும் சீனாயில்தான் 'சேர்த்துக்' கொடுக்கப்பட்டன. ஆனால், ஒழுக்கப் பிரமாணத்தை மனதில்வைத்தே புவல் பேசினாரென்று பின்வரும் கேள்வியிலிருந்து நாம் அறியலாம்.

***நியாயப்பிரமாணம் பின்னர் சேர்க்கப்பட்டதென பவுல் கூறுகிறாரா? எதோடு சேர்த்து அது கொடுக்கப்பட்டது? ஏன்? கலா 3:19 ஐ ரோமர் 5:13,20 உடன் ஒப்பிடுங்கள்.***

---

முதலில் எழுதப்பட்ட ஓர் உயிலோடு, பின்னர் ஒன்றைச் சேர்த்து எழுதி, அதை மாற்றுவதுபோல், ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையோடு நியாயப்பிரமாணமும் சேர்க்கப்பட்டதாக பவுல் சொல்லவில்லை. சீனாய்க்கு முன்னரே நியாயப்பிரமாணம் இருந்தது. (நாளைய பாடம்). எனவே, முற்றிலும் வேறுபட்ட ஒரு நோக்கத்திற்காக நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டதாக பவுல் கூறுகிறார். மக்கள் மீண்டும் தேவனிடம் திரும்பவும், விசுவாசத்தோடு அவரிடம் வரும் யாவரும் அவர் அருளும் கிருபையைப் பெற்றுகொள்ளலாமென்றும் நியாயப்பிரமாணம் நினைவூட்டியது. இரட்சிப்பைச் 'சம்பாதிக்கும்' ஒரு வழியாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை. மாறாக, 'மீறுதல் பெருகும்படி' (ரோமர் 5:20) அதாவது, 'நம்முடைய வாழ்க்கையில் பாவத்தைத் தெளிவாகக் காட்டும்படி' நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதாம். ரோமர் 7:13.

சடங்காசாரப் பிரமாணங்கள் மேசியாவையும், நமக்கு ஓர் இரட்சகர் தேவை என்பதையும் சுட்டிக்காட்டின; ஆனால், ஒழுக்கப்பிரமாணம்தான், 'செய்யாதிருப்பாயாக' என்று பாவத்தை வெளிப்படுத்துகிறது. அதாவது, பாவம் நம் இயல்பில் கலந்திருப்பதையும், அது தேவபிரமாணத்திற்குப் புறம்பானது என்றும் வெளிப்படுத்துகிறது. ரோமர் 3:20; 5:13,20; 7:7,8,13. எனவேதான், 'நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை' என்று பவுல் சொல்கிறார். ரோமர் 4:15.

நியாயப்பிரமாணம் ஒரு பூதக்கண்ணாடி போல் செயல்படுகிறது. அந்தக் கண்ணாடியை வைத்து, அழுக்குப்படிந்த ஒரு வஸ்திரத்தைப் பார்த்தால், அழுக்கின் அளவை அது அதிகரிக்காது; மாறாக, சாதாரணக் கண்ணுக்குத் தெரிவதைவிட அதிக அழுக்கு அந்த வஸ்திரத்தில் இருப்பதை அது தெளிவாகக்காட்டும்.

**சீனாயில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதென்று பவுல் கூறுவதால், அதற்குமுன் நியாயப்பிரமாணம் இருக்கவில்லையா? சீனாய்க்குமுன் இருந்த நிலைக்கும் சீனாய்க்குப்பின் உள்ள நிலைக்கும் வித்தியாசம் என்ன? ஆதி 9:5,6; 18:19; 26:5; 39:7-10; யாத் 16:22-26.**

இடிமுழக்கம், மின்னல், மரணதண்டனை போன்றவற்றால் ஆபிரகாமுக்கு தேவன் தம் நியாயப்பிரமாணத்தை வெளிப்படுத்தவில்லை. ஆனால், இஸ்ரவேலருக்கு அந்த விதத்தில்தான் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். யாத் 19:10-23. ஏன்? இஸ்ரவேலர் எகிப்தில் இருந்தபோது, தேவனுடைய மகத்துவத்தையும் அவருடைய ஒழுக்க நியதியையும் மறந்துவிட்டார்கள். எனவே, அவர்கள் எவ்வளவுக்குப் பாவிகளென்பதையும் தேவனுடைய பிரமாணம் எவ்வளவுக்குப் பரிசுத்தமானதென்பதையும் அவர்கள் உணரவேண்டியதிருந்தது. சீனாய் மலையின் வெளிப்பாடு அந்த உணர்வை அவர்களுக்குள் ஏற்படுத்தியது.

**'வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும்'நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதாக பவுல் கூறுவதின் அர்த்தம் என்ன? கலா 3:16-19.**

'சீனாயில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் தற்காலிகமானது; அது ஆபிரகாமுக்குப்பின் 430 வருடங்கள் கழித்துக் கொடுக்கப்பட்டு, கிறிஸ்துவோடு நிறைவுபெற்றது' என்று சிலர் நினைக்கிறார்கள். ரோமர் புத்தகமும் மத் 5:17-19 உம் சொல்வதற்கு இந்த விளக்கம் முரணாக உள்ளது.

'வருமளவும்' எனும் வார்த்தை, குறிப்பிட்ட ஒரு காலக்கட்டத்தைச் சுட்டிக் காட்டுவதாக நினைப்பதுதான் தவறு. கர்த்தருக்குப் பயப்படுகிறவனைப்பற்றி, 'அவன் இருதயம் உறுதியாயிருக்கும்; அவன் தன் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காணுமட்டும் பயப்படாதிருப்பான்' என்கிறது சங் 112:8. எனவே, சத்துருக்கள் சரிக்கட்டப்பட்டதும் பயப்பட ஆரம்பிப்பார்களென்று சொல்லமுடியுமா? 'உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்' என்று வெளி 2:25 இல் இயேசு சொல்கிறார். எனவே, இயேசு வந்தபின் நமக்கு பற்றிக்கொள்ளுதல் அவசியமில்லையென்று அர்த்தமா?

கிறிஸ்துவின் வருகையோடு நியாயப்பிரமாணத்தின் வேலை முடியவில்லை. அது இருக்கும்மட்டும் பாவத்தைச் சுட்டிக்காட்டிக்கொண்டே இருக்கும். கிறிஸ்துவின் வருகை, மனிதரின் வாழ்வில் முக்கியமான ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. நியாயப்பிரமாணம் செய்யமுடியாததை கிறிஸ்து செய்தார்; பாவத்திலிருந்து மெய்யான விடுதலை தந்தார். அதாவது, பாவிகளை நீதிமான்களாக்கி, ஆவியானவரைக் கொண்டு தம் பிரமாணத்தை அவர்களில் நிறைவேற்றினார். ரோமர் 8:3,4.

'ஆண்டவர் எனக்கு இன்னின்ன காரியங்களைச் செய்துவிட்டால், நான் அவரை மீண்டும் சந்தேகிக்கவேமாட்டேன்' என்று எப்போதாவது நீங்கள் நினைத்ததுண்டா? தேவ வல்லமையின் மகத்தான வெளிப்பாட்டை சீனாய் மலையில் இஸ்ரவேலர் கண்டார்கள்; ஆனாலும், அவர்கள் எவ்வாறு நடந்துகொண்டார்களென யோசியுங்கள். மெய்யான விசுவாசம்பற்றி அது சொல்வது என்ன? அதை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம்?

## வாக்குத்தத்தத்தின் மேன்மை

*'சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே.' அப் 7:38.*

'கிருபையின் உடன்படிக்கையை நியாயப்பிரமாணம் அவமாக்கவில்லை' என்றுதான் கலா 3:19, 20 இலும் பவுல் கூறுகிறார். ஆனால், இதற்கு நேர்மாறாக பவுலின் எதிரிகள் சொல்லிவந்தார்கள். நம் இரட்சிப்பு தேவகிருபையைச் சார்ந்திராமல், நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதைச் சார்ந்திருக்குமானால், பாவிகளாகிய நம் நிலை என்னவாகும்? நம்பிக்கையற்ற நிலையில் இருந்திருப்போம்.

கலா 3:19,20 ஐ விளங்கிக்கொள்வது கடினமாக இருக்கலாம். ஆனால், 'மோசேயின் மூலமாகவும் தேவதூதர்கள் மூலமாகவும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதால், வாக்குத்தத்தத்திற்குப் பக்கத்துணையாக அது இருக்கிறது'. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதில் தேவதூதர்களின் பங்குபற்றி யாத்திராகமத்தில் எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால், உபா 33:2; அப் 7:38, 53; எபி 2:2 இல் அதைக் காணலாம். 1 தீமோ 2:5 இல் 'மத்தியஸ்தர்' என்று கிறிஸ்துவை பவுல் குறிப்பிடுகிறார். ஆனால், உபா 5:5 ஐ மனதில் வைத்துத்தான் கலா 3:19,20 இல் பவுல் அந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கவேண்டும். ஏனென்றால், 'கர்த்தருடைய வார்த்தையை உங்களுக்கு அறிவிக்கும்படி, அக்காலத்திலே நான் கர்த்தருக்கும் உங்களுக்கும் நடுவாக நின்றேன்' என்று உபாகமம் 5:5 இல் மோசே சொல்கிறார்.

சீனாய் மலையில் எண்ணற்ற தூதர்கள் சூழ, நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது; தேவன் நேரடியாக மக்களிடம் நியாயப்பிரமாணத்தைக் கொடுக்கவில்லை. ஆனால், ஆபிரகாமிடமோ தேவன் நேரடியாக வாக்குப்பண்ணினார்; அதுபோல்தான் விசுவாசிகள் ஒவ்வொருவரிடமும் அவர் வாக்குப்பண்ணுகிறார். அதற்கு மத்தியஸ்தர் எவரும் தேவையில்லை. இறுதியாக, நியாயப்பிரமாணம் முக்கியமானதாக இருக்கலாம்; ஆனாலும், 'விசுவாசத்தினால் கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறோம்' எனும் வாக்குத்தத்தத்திற்கு அது பதிலாக முடியாது. மாறாக, அந்த வாக்குத்தத்தம் எவ்வளவு அற்புதமானதென்பதை நாம் நன்றாக விளங்கிக்கொள்ள, நியாயப்பிரமாணம் உதவுகிறது.

***தேவனோடு ஆபிரகாம் நேரடியாகப் பேசின அனுபவம் எப்படிப்பட்டதாக இருந்திருக்கும்? தேவனோடு அப்படியொரு ஐக்கியம் வைத்திருப்பதின் அனுகூலம் என்ன? ஆதி* 15:1-6; 18:1-33; 22:1-18.**

தேவனோடு இத்தகைய அனுபவத்தைப் பெற்ற வேதாகம நபர்கள் சிலரைப் பற்றி யோசியுங்கள். உதாரணமாக, ஏதேனில் ஆதாம்-ஏவாள் (ஆதி 3); பெத்தேலில் யாக்கோபு (ஆதி 28); தமஸ்குச் சாலையில் பவுல் (அப் 9). இதுபோன்ற அற்புத அனுபவம் உங்களுக்கு ஏற்படாமல் இருந்திருக்கலாம்; ஆனாலும் என்ன விதத்தில் தேவன் தம்மை உங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்? தேவனோடு ஆபிரகாமுக்கு ஏற்பட்ட ஐக்கியம் உங்கள் வாழ்க்கையில் காணப்படாதபடி தடைசெய்பவை யாவை? அவற்றை அகற்ற என்ன செய்யலாம்?

"அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலர் தேவனைப்பற்றிய அறிவையும் ஆபிரகாமின் உடன்படிக்கையின் நியதிகளையும் பெருமளவில் மறந்துபோனார்கள். எகிப்திலிருந்து அவர்களை விடுவித்து, தம் வல்லமையையும் இரக்கத்தையும் அவர்களுக்கு வெளிப் படுத்தவும், அதன் மூலம் அவர்கள் தம்மை நேசித்து நம்பவும் தேவன் விரும்பினார். செங் கடலுக்கு அவர்களைக் கொண்டுவந்தார்; எகிப்தியர் துரத்திவந்ததால், தப்புவதற்கு வழியே இல்லாததுபோல் தோன்றியது. தாங்கள் முற்றிலும் உதவியற்ற நிலையில் இருப் பதையும், தேவ உதவி தேவைப்படுவதையும் உணர்ந்தார்கள். அப்போது அவர்களை விடுவிக்க தேவன் செயல்பட்டார். அதன் மூலம், தேவன் மேல் அதிக அன்புவைத்தார்கள்; தேவவல்லமை தங்களுக்கு உதவுமென்பதை நம்பினார்கள். உலக அடிமைத்தனத்தி லிருந்து அவர்களை விடுவித்து, தம்மோடு இணைத்துக்கொண்டார். ஆனால், இன்ன மும் மேலான ஓர் உண்மை அவர்கள் மனதில் பதிய வேண்டியிருந்தது. சிலைவழிபாட்டின் மத்தியில் வாழ்ந்தவர்கள் அவர்கள். தேவன் பரிசுத்தர் என்பதையும், தங்கள் இருதயத் தில் பாவம் நிறைந்திருக்கிறது என் பதையும், தங்கள் சொந்த முயற்சியால் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய இயலாது என்பதையும், தங்களுக்கு ஓர் இரட்சகர் தேவை என்பதையும்பற்றின மெய்யறிவு இல்லாதவர்களாக இருந்தார்கள். இவற்றை எல்லாம் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியதிருந்தது." – *EGW, PP, p 371.*

சீனாயில் மகிமையான விதத்தில் கொடுக்கப்பட்ட தேவபிரமாணம், பாவியைக் குற்றவாளியாகத் தீர்ப்பதாய் இருந்தது. குற்றப்படுத்தும் தன்மைதான் நியாயப்பிரமா ணத்திற்கு உண்டு; நியாயப்பிரமாணத்திற்கு மன்னிக்கும் வல்லமையோ, மீட்கும் வல் லமையோ கிடையாது." – *EGW, 6SDABC, p 1094*.

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *உங்களுக்கு ஒருவர் வாக்குக்கொடுத்து, பின்னர் நிறைவேற்றாதபோது, எவ்வாறு இருந்தது? வாக்குக்கொடுத்தவர் நிறைவேற்ற நினைத்தும், முடி யாமல்போயிருக்கலாம்; அல்லது அவர் தன் மனதை மாற்றியிருக்கலாம். அல்லது கொடுத்த வாக்கை நிறைவேற்றும் எண்ணமே அவருக்கு இல்லா மல் இருந்திருக்கலாம். தேவ வாக்குத்தத்தங்களை ஏன் நம்பவேண்டும்?*
2. *தேவன் தந்திருக்கும் முக்கியச் சத்தியங்களைக் காணக்கூடாத அளவிற்குச் சுற்றுச்சூழல் நம்மை எவ்விதங்களிலெல்லாம் சீர்கெடுப்பதற்கு வாய்ப் பிருக்கிறது? அப்படிப்பட்ட சீர்கேடான தாக்கங்களை நாம் எவ்வாறு கண்டுகொள்ளலாம்? அவற்றை எவ்வாறு எதிர்கொள்ளலாம்?*

**பாடச்சுருக்கம்:** *சீனாயில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் ஆபிரகாமிடம் தேவன் செய்த உடன்படிக்கையை அவமாக்கவில்லை; அந்த வாக்குத்தத்தங்களின் பயன்களை மாற்றவும் இல்லை. மக்கள் தங்கள் பாவநிலையின் அளவை உள்ளபடி அறியவும், ஆபிர காமுக்கும் அவர் சந்ததியாருக்கும் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் தேவையை உணர வும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.